## சுருக்கம்

பள்ளிக்கல்வி - 2012 - 2013ம் கல்வி ஆண்டு முதல் முப்பருவமுறை மற்றும் தொடர் மற்றும் முழுமை மதிப்பீட்டு முறை நடைமுறைப்படுத்துதல் சார்ந்து வெளியிடப்பட்ட அரசாணைக்கு திருத்தம் வெளியிடுதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வி(வி1)துறை

அரசாணை (நிலை) எண்.140

நாள் : 11.06.2012
திருவள்ளுவராண்டு 2043

படிக்கப்பட்டவை.

1. அரசாணை (நிலை) எண் 143, பள்ளிக்கல்வித் துறை, நாள் 19.09.2011
2. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவன இயக்குநர் கடிதம் ந.க.எண்.796/ஈ2/12 நாள் 24.5.2012.

ஆணை :-

தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் முப்பருவக் கல்வி முறையும் (Trimester) தொடர் மற்றும் முழுமை மதிப்பீடு முறையும் (Continuous and Comprehensive Evaluation) 2012 - 2013ம் கல்வியாண்டு முதல் I - VIII வகுப்புகளுக்கு நடைமுறைப்படுத்தப்பட உள்ளன. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தொடர் மற்றும் முழுமை மதிப்பீட்டு முறையைச் (CCE) செயல்படுத்தும் பரிந்துரைகள் குறித்து விளக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளது. தற்போது மேலே இரண்டில் படிக்கப்பட்ட மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவன இயக்குநரின் பரிந்துரைக்கேற்ப அவ்வரசாணையில் பத்தி 2(10) மற்றும் பத்தி 2(11)ல் தற்போதுள்ள விவரங்களுக்குப் பதிலாக கீழ்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

| அரசாணையில் தற்போதுள்ள விவரம் | திருத்தம் |
|---|---|
| அரசாணையின் பத்தி 2(10) இல் ஒவ்வொரு பருவத்திற்கும் ஆறு வளரறித் தேர்வுகள் FA (a) மற்றும் FA (b) மதிப்பிட்டு அவற்றுள் சிறந்த நான்கினை பதிவு செய்ய வேண்டும் என்று உள்ளதற்கு பதிலாக | ஒவ்வொரு பருவத்திற்கும் நான்கு வளரறித் தேர்வுகள் FA (a) மற்றும் FA (b) மதிப்பிட்டு அவற்றுள் சிறந்த இரண்டினை பதிவு செய்ய வேண்டும் என திருத்தம் செய்யப்படுகிறது. |
| அரசாணையின் பத்தி 2(11)ல் உள்ள பட்டியலில் முதல் பருவத்திற்குரிய தொகுத்தறித் தேர்வின் கால அள்வில் செப்டம்பர் முதல் என்பதற்கு பதிலாக | செப்டம்பர் மூன்றாவது வாரம் என திருத்தம் செய்யப்படுகிறது. |

www.TeacherTN.com

| | |
|---|---|
| அதே பட்டியலிலுள்ள மூன்றாம் பருவத்திற்கு தொகுத்தறித் தேர்வின் கால அளவில் ஏப்ரல் முதல் வாரம் என்பதற்கு பதிலாக | ஏப்ரல் மூன்றாவது வாரம் என திருத்தம் செய்யப்படுகிறது. |

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,

அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை-6
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6
மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி
நிறுவன இயக்குநர், சென்னை-6
தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், சென்னை-6
மாநில திட்ட இயக்குநர், சர்வசிக்ஷா அபியான், சென்னை-6
மாநில கூடுதல் இயக்குநர்,
மத்திய இடைநிலைக் கல்வி திட்ட இயக்ககம், சென்னை-6
தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-6
இயக்குநர்,
பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி, சென்னை-6

<u>நகல்</u>
சமூக நலத்துறை, சென்னை-9
ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை-9
பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் மற்றும்
சிறுப்பான்மையினர் நலத்துறை, சென்னை-9
அனைத்து அலுவலர்கள் / பிரிவுகள்
பள்ளிக் கல்வித் துறை, சென்னை-9

இருப்புக் கோப்பு / கூடுதல் நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

www.TeacherTN.com